செய்தி வெளியீடு எண்.69-2019 நாள்: 30.01.2019

# விழுப்புரம் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரத்துறை) சார்பாக, விழுப்புரம் வட்டம் தளவானூர் கிராமம் - கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டம் எணதிரிமங்கலம் கிராமங்களுக்கு இடையே பெண்ணையாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டும் பணியினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் துவக்கி வைத்தார்.

******

விழுப்புரம் மாவட்டம் தளவானூரில் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரத்துறை) சார்பாக, விழுப்புரம் வட்டம் தளவானூர் கிராமம் - கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டம் எணதிரிமங்கலம் கிராமங்களுக்கு இடையே பெண்ணையாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டும் பணியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (30.01.2019) துவக்கி வைத்தார்.

இந்த அணைக்கட்டானது 400 மீட்டர் நீளமும் 3.1 மீட்டர் உயரமும் கொண்டது. இதன் இருபுறமும் பக்கத்திற்கு மூன்று மணற்போக்கிகள் வீதம் ஆறு மணற்போக்கிகளை கொண்டது. அணைக்கட்டு அமைப்பதன் மூலம் இந்த பகுதியில் உள்ள நிலத்தடி நீர்மட்டம் செறிவூட்டப்பட்டு பெண்ணையாற்றின் இரு பகுதிகளில் உள்ள 13 கிராமங்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள 87 எண்ணிக்கையிலான கிணறுகள் இந்த அணைக்கட்டால் பயன்பெறும். மேலும், இந்த அணைக்கட்டால் 4150 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும் விழுப்புரம் வட்டம் மலட்டாற்றில் தண்ணீர் செல்வதன் மூலம் மலட்டாற்றின் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயரும் என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.பிரியா, விழுப்புரம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சு.இராஜேந்திரன், பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரத்துறை) செயற்பொறியாளர் திரு.ஜவஹர், உதவி செயற்பொறியாளர் திருமதி.சுமதி, உதவி பொறியாளர்கள் திரு.ஞானசேகர், திரு.ஜெகதீசன், ஒப்பந்ததாரர் டாக்டர்.தென்னரசு மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.